# விவேகானந்த கல்லூரி

(பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது)
மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைந்த தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்
தேசிய தர நிர்ணயக் குழுவினரால் (NAAC) 'A' கிரேடு மறு மதிப்பீடு செய்யப் பெற்றது (CGPA 3.59 out of 4.00)
(மேலாண்மை: ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்)
திருவேடகம் மேற்கு – 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு
இணையதளம்: www.vivekanandacollege.org மின்னஞ்சல்: principal@vivekanandacollege.org

04543-258234, 258334
நிகரி : 04543-258358



சுவாமி நியமானந்த
செயலர்

முனைவர் சி.இராஜா
முதல்வர்

# குருகுலச் சுடர்

கல்வியாண்டு 2017-18

சுடர் : 3

ஆகஸ்ட் 2017

**அன்புடையீர்,**

வணக்கம். குருகுலம் இனிதே நடைபெற்று வருகின்றது. கடந்த ஆகஸ்ட் 2017ல் நடந்த நிகழ்ச்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

## குருகுலம் சம்பந்தமானது

08.08.2017 முதல் 12.08.2017 வரை அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கான முதல் பருவத்தின் முதலாம் அகமதிப்பீட்டுத் தேர்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 12.08.2017 முதல் 23.08.2017 வரையிலான இடைபருவ விடுமுறைக்குப் பின் 24.08.2017 அன்று கல்லூரி துவங்கப்பட்டது.

07.08.2017, 28.08.2017 ஆகிய திங்கட்கிழமைகளில் காலை 8.10 மணிக்கு கல்லூரியில் தேசியக் கொடியேற்றம் நடைபெற்றது.

06.08.2017, 27.08.2017 ஆகிய சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணி முதல் 6.45 மணி வரை கல்லூரியின் பிரார்த்தனைக்கூடத்தில் பஜனை சிறப்பாக நடைபெற்றது.

12.08.2017 அன்று காலை 9.40 மணிக்கு கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் மதுரை, அகில இந்திய வானொலியின் உதவி இயக்குநர் (நிகழ்ச்சி), திருமதி M.ஜோதிமணி கலந்துகொண்டு 'நல்ல குருநாதர் சுவாமி விவேகானந்தர்' என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர், முதல்வர், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாதக் குழு ஒருங்கிணைப்பாளர் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

25.08.2017 அன்று அதிகாலை 4.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அகண்ட நாம ஜெபம் மற்றும் மாணவர்கள் தங்கும் அறைகளில் சிறப்பு பூஜையுடன் வழிபாடு ஆகியவற்றுடன் விநாயகர் சதுர்த்தி விழா மிக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று மாலை 4.00 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற நிறைவு விழாவில் மிக சிறப்பான வழிபாடு மேற்கொண்ட அறைகளுக்கு ஆண்டு வாரியாக பரிசுகள் வழங்கப்பட்டது.

## பொருளியல் துறை

01.08.2017 அன்று துறைத்தலைவர் முனைவர் P.பட்டினத்தார், பேராசிரியர்கள் திரு.N.தினகரன் மற்றும் திரு.M.பிரேமானந்தம் ஆகியோருடன் பொருளியல்துறை மாணவர்கள் 62பேர் மதுரை, கப்பலூரில் அமைந்துள்ள பார்லே-G ரொட்டி தயாரிக்கும் தொழிற்சாலையினைப் பார்வையிட்டு மூலதனம், உற்பத்தி, விற்பனை உள்ளிட்ட பல்வேறு விவரங்களைக் கேட்டறிந்தனர்.

11.08.2017 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் கல்லூரியின் பொருளியல் துறை மற்றும் திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராமம், காந்திகிராம சேவைமையம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன் மூலம் பொருளியல் துறை மாணவர்கள் காந்திகிராம சேவை மையம் சென்று தொழிற்பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. துணைமுதல்வர் முனைவர் T.வெங்கடேசன், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர் முனைவர் P.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பொருளியல்துறைத் தலைவர் முனைவர் P.பட்டினத்தார் மற்றும் காந்திகிராம சேவை மையத்தின் மேம்பாட்டு அலுவலர் திரு.C.கிருஷ்ணசாமி ஆகியோர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

## வரலாற்றுத்துறை

03.08.2017 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரலாற்றுத் துறை மாணவர்கள் மற்றும் பொருளியல் துறை மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் வரலாற்றுத் துறை பேராசிரியர் முனைவர் T.காளியப்பன் கலந்துகொண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் பல்வேறு தேர்வுகள் குறித்தும் அவற்றில் வெற்றி பெறும் வழிவகை குறித்தும் மாணவர்களிடையே உரையாற்றினார். மேலும் தேர்வுகளுக்குத் தயாராவது குறித்த மாணவர்களின் சந்தேகங்களுக்குப் பதிலளித்தார்.

## வணிகவியல் துறை

02.08.2017 அன்று திருச்சி, புனித வளனார் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வில் பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் புறத்தேர்வராகக் கலந்துகொண்டு தேர்வை நடத்தினார்.

11.08.2017 அன்று உதவிப்பேராசிரியர் முனைவர் K.செல்லப்பாண்டியன், திண்டுக்கல், GTN கல்லூரியின் வணிகவியல் (கணினி பயன்பாட்டு) துறையில் நடைபெற்ற விரிவுரை நிகழ்ச்சியில் (Guest Lecture Programme) சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'வணிகவியல் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகள்' என்ற தலைப்பில் மாணவர்களிடையே உரையாற்றினார்.

11.08.2017 அன்று கரூர், அரசு கலைக் கல்லூரியின் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வில் பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் புறத்தேர்வராகக் கலந்துகொண்டு தேர்வை நடத்தினார்.

17.08.20117 அன்று கிருஷ்ணன்கோயில், கலசலிங்கம் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் துறையில் நடைபெற்ற Bridge Course Programmeல் பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு “Recent Trends in Commerce and Industry” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**கணிதத்துறை**

03.08.2017 அன்று கணிதத்துறையில் நடத்தப்பட்ட ‘Math-E-Club’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் கணிதமேதை ஆர்க்கிமிடிஸ் பற்றிய விவரங்கள் கூறப்பட்டன. Quiz, Jumbled Theorem, Connnections, Who Am I? ஆகிய கணிதம் சார்ந்த போட்டிகளுடன் வரவேற்புரை, நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு ஆகியவை மாணவர்களால் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியில் துறைத்தலைவர் மற்றும் துறைப்பேராசிரியர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

**இயற்பியல் துறை**

09.08.2017 முதல் 11.08.2017 வரை சென்னை SRM பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற Nanoscience and Nano Technology தொடர்பான 4ஆவது சர்வதேசக் கருத்தரங்கில் (ICONN 2017) உதவிப்பேராசிரியர் S.கணேசன் பங்குகொண்டு தனது ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்தார்.

24.08.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் ‘Thursday Meet’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி முதலாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்டது. வரவேற்புரையுடன் துவங்கிய நிகழ்ச்சியில் திருக்குறள் மற்றும் அதன் தெளிவுரை, Dump Charade, இயற்பியல் வினாடிவினா, இயற்பியல் விஞ்ஞானிகள் குறித்த சொற்பொழிவு, நன்றியுரை ஆகிய நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. நிகழ்ச்சிகளை மாணவர் S.துளசிநாத் தொகுத்து வழங்கினார். **Remove This**

31.08.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற ‘Thursday Meet’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியை மூன்றாமாண்டு மாணவர்கள் தொகுத்து வழங்கினர். வரவேற்புரையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. திருக்குறளும் தெளிவுரையும், இயற்பியல் விதி பற்றிய சொற்பொழிவு, இயற்பியலோடு தொடர்புடைய ‘Connections’, வினாடிவினா, Dumb Charade மற்றும் இயற்பியல் விஞ்ஞானி ஒருவர் பற்றிய விளக்கம் ஆகிய நிகழ்ச்சிகளோடு நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவுற்றது.

**வேதியியல் துறை**

2015-2017 ஆண்டுகளில் வேதியியல் துறையில் முதுநிலை வேதியியல் பயின்ற மாணவர் S.மனோஜ்குமார், தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழக நிதிஉதவியுடன் பேராசிரியர் A.கண்ணன் வழிகாட்டலில் மேற்கொண்ட மாணவர் ஆய்வுத் திட்ட அறிக்கையை சமர்ப்பித்தார். இவர் மாநில அளவில் முதலிடம் பெற்று அதற்கான சான்றிதழை 05.08.2017 அன்று கோயமுத்தூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பெற்றார்.

03.08.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற சர்வதேச விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் துறைத்தலைவர் பேராசிரியர் B.சேர்வாரமுத்து வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முன்னிலை வகித்தனர். துறையின் முன்னாள் மாணவரும் தைவான் தேசிய ஷிங் ஹுவா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மாணவருமான முனைவர் P.ராஜகண்ணு “Recent Development in Organic Light Emitting Diode” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் M.இரகு நன்றியுரை வழங்கினார்.

19.08.2017 அன்று கோயமுத்தூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வேதியியல் துறையில் நடைபெற்ற CSIR NET மற்றும் SET தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்பில் துறைத்தலைவர் பேராசிரியர் B.சேர்வாரமுத்து கலந்துகொண்டு இத்தேர்வுகளை வெற்றிகரமாக எதிர்கொள்வது குறித்து சிறப்புரை வழங்கினார்.

**தாவரவியல் துறை**

02.08.2017 அன்று மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரான மதுரை, அழகர்கோவில் மழைக்காடுகளுக்கு தாவரவியல்துறைத் தலைவர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் 100 பேர் களஆய்வு மேற்கொண்டு அங்குள்ள பல்வேறு வகையான தாவர வகைகள் அவற்றின் பண்புகள் குறித்து அறிந்தனர்.

**வணிகவியல் கணினிப்பயன்பாடு துறை**

01.08.2017 மற்றும் 02.08.2017 ஆகிய இரு நாட்கள் M.சரணவன் (III CA), பாலாஜி (II CA) ஆகியோர் திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராமம், காந்திகிராம சேவை மையத்திற்குச் சென்று தொழில்முனைவோர் பயிற்சி முகாமில் கலந்துகொண்டார். அதில் ஊதுபத்தி, சாம்பிராணி மற்றும் அப்பளம் தயாரித்தல் போன்றவற்றைக் கற்றறிந்து அவற்றை தனது துறைமாணவர்களுடன் கல்லூரியிலேயே தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார்.

04.08.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் ஆளுமைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் Weekly News Bulletin (ஆங்கிலம், ஹிந்தி), வணிக வினாடி-வினா, Who Am I?, கட்டுரை வாசித்தல், ஆவணப்படம் தயாரித்து வெளியிடல், வரவேற்புரையும், நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு ஆகிய நிகழ்வுகள் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன. ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்.

08.08.2017 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வணிகவியல் கணினிப் பயன்பாட்டு மாணவர்கள் தங்கள் துறையிலேயே தயாரித்த ஊதுபத்து, சாம்பிராணி, அப்பளம் போன்ற பொருட்கள் கல்லூரி செயலரால் வெளியிடப்பட்டது.

**கணினிஅறிவியல் துறை**

01.08.2017 அன்று ‘Software Skills Development Programme’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி வணிகவியல்துறையின் MultiMedia Hallல் நடைபெற்றது. மூன்றாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் கட்டுரை சமர்ப்பித்தல், Weekly News, கணினிஅறிவியல் சம்பந்தமான வினாடிவினா, Identify the Personality ஆகிய நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக வணிகவியல்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் K.அழகேசன் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

**தமிழத்துறை**

06.08.2017 மற்றும் 07.08.2017 ஆகிய இருநாட்கள் விருதுநகர் வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரியின் தமிழத்துறையில் நடைபெற்ற “பக்தி நெறியில் சைவ-வைணவக் காப்பியங்கள்” என்ற தலைப்பிலான கருத்தரங்கில் துறைத்தலைவர் முனைவர் வ.க.ராமகிருஷ்ணன் கலந்துகொண்டார். **ஆங்கிலத்துறை**

18.08.2017 மற்றும் 19.08.2017 ஆகிய இரு நாட்கள் மதுரை மேலூர், அரசு கலைக் கல்லூரியின் ஆங்கிலத்துறையில் பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதியுதவியுடன் நடைபெற்ற இரண்டுநாள் தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா கலந்துகொண்டு ‘An Ecological Study of Beatrix Potter’s British Tales and Her Eilighting Visual Genres’ என்ற தலைப்பிலான தனது ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்தார்.

30.08.2017 அன்று கொடைக்கானல் கிறித்துவக் கல்லூரியில் நடைபெற்ற Oscar Wilde’s “The Importance of Being Earnest: A Live Excercise in Speaking and Listening Skills” என்ற தலைப்பிலான ஆங்கிலமொழி கற்றல் மற்றும் பேசுதல் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் துறைத்தலைவர் திரு. P.குமரேசன், பேராசிரியர்கள் பாரதிராஜ், M.சரவணக்குமார் ஆகியோருடன் ஆங்கில இலக்கியத்துறை மாணவர்கள் 38 பேர் கலந்துகொண்டனர்.

**உடற்கல்வித்துறை**

03.08.2017 அன்று நமது கல்லூரியின் சுவாமி சித்பவானந்தர் உள் விளையாட்டு அரங்கில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் ‘B’ மண்டல கல்லூரிகளுக்கு இடையேயான சதுரங்கப்போட்டி மற்றும் இறகுப்பந்து போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளை கல்லூரி செயலர் சுவாமி நியமானந்த துவக்கிவைத்தார். இறகுப்பந்து போட்டியில் சௌராஷ்டிரா கல்லூரி முதலிடமும், மதுரைக் கல்லூரி இரண்டாமிடமும் பிடித்தன. சதுரங்கப்போட்டியில் மன்னர் திருமலை கல்லூரி முதலிடமும், சரஸ்வதி நாராயண் கல்லூரி இரண்டாமிடமும் பிடித்து வெற்றி பெற்றன. வெற்றி பெற்ற அணிகளுக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் சி.இராஜா பரிசுகள் வழங்கி பாராட்டினார். இறகுப்பந்து போட்டியில் சிறப்பாக விளையாடிய நமது கல்லூரி மாணவர் M.வனராஜ் (II B.Sc CS) காமராசர் பல்கலைக்கழகத்தின் மண்டலங்களுக்கிடையிலான இறகுப்பந்து அணிக்குத் தேர்வானார்.

19.08.2017 அன்று மதுரைக் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக ‘B’ மண்டல கல்லூரிகளுக்கிடையேயான கையுந்து பந்துப் போட்டியில் கலந்துகொண்ட நமது கல்லூரி அணியிலிருந்து A.நிஷாந்த் (III B.A His) மண்டலங்களுக்கிடையிலான போட்டியில் கலந்துகொள்ளத் தேர்வானார்.

24.08.2017 அன்று மதுரைக் கல்லூரியில் மதுரை காமராசர் பல்கலைக்கழக ‘B’ மண்டல கல்லூரிகளுக்கிடையிலான பூப்பந்துப் போட்டி நடைபெற்றது. இதில் நமது கல்லூரி அணி வெற்றி பெற்று மூன்றாமிடம் பிடித்தது. மேலும் பல்கலைக் கழக மண்டலங்களுக்கிடையே நடைபெறும் போட்டிக்கான ‘B’ மண்டல அணிக்கு நமது கல்லூரியின் 5 மாணவர்கள் தேர்வானார்கள். மாணவர்களை உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் அழைத்துச் சென்றார்.

27.08.2017 மற்றும் 28.08.2017 ஆகிய இரண்டு நாட்கள் விருதுநகர், V.H.N.S கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக மண்டலங்களுக்கிடையிலான பூப்பந்துப் போட்டியில் ‘B’ மண்டல அணி சார்பாக நமது கல்லூரியின் P.கோபிநாத் (III Zoo), S.மோகன்பாண்டி (II CS), S.சிவசுப்ரமணியன் (III CS), G.குணாளன் (III Mat), T.மணிச்சந்திரன் (I His) ஆகிய ஐந்து மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் ‘B’ மண்டல அணி வெற்றி பெற்று முதலிடம் பிடித்தது.

30.08.2017 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழக ‘B’ மண்டல கல்லூரிகளுக்கிடையேயான கூடைப்பந்துப் போட்டி சௌராஷ்டிரா கல்லூரியில் நடைபெற்றது. நமது கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்ட இப்போட்டியில் சதீஷ்குமார் (III Bot) பல்கலைக்கழக மண்டலங்களுக்கிடையிலான போட்டிக்கு ‘B’ மண்டல அணிக்குத் தேர்வானார்.

**NSS/NCC/அப்பர் உழவாரப்பணிக் குழு**

01.08.2017 அன்று மதுரை மாவட்டம், மன்னாடிமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய வருடாபிஷேகத்தில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 26பேர் விடுதிக்கண்காணிப்பாளர் திரு. D.விக்னேஸ்வரன் உடன் சென்று கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உணவு பரிமாறுதல் ஆகிய சேவைகள் புரிந்தனர்.

17, 18, 19 மற்றும் 20.08.2017 ஆகிய நான்கு நாட்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவன கல்வி நிறுவனங்களின் தலைமையகமான திருச்சி மாவட்டம், திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில் அதன் 75 ஆவது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. நமது கல்லூரியின் தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள்

310 பேர், தேசிய மாணவர் படை அலுவலர், திட்ட அலுவலர்கள் மற்றும் பேராசிரியர்கள் 20பேருடன் 14.08.2017 முதல் 21.08.2017 வரை இங்கு முகாமிட்டு விழா ஏற்பாடுகள், கூட்டத்தை நெறிப்படுத்துதல், உணவு பரிமாறுதல் மற்றும் வளாகத் தூய்மை ஆகிய பல்வேறு சேவைகளை ஆற்றினர்.

02.08.2017 அன்று S.நவநீதன் (II B.Com), A.பாலஅரவிந்த் (II B.Com), S.R.சரவணன் (II Phy), K.சேதுராமு (II Eng), P.அழகர்ராஜா (II Phy), S.ஆனந்த் (II Bot) ஆகிய தேசிய மாணவர் படை மாணவர்கள் ஆறு பேர் திண்டுக்கல் தேசிய மாணவர் படை அலுவலகத்தில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொள்வதற்கான தேர்வில் கலந்துகொண்டனர். இதில் 5 மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர்.

02.08.2017 முதல் 11.08.2017 வரை திருச்சிராப்பள்ளி, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புதுதில்லி குடியரசு தின அணிவகுப்பில் கலந்தகொள்வதற்கான தேர்வு முகாமில் தேசிய மாணவர் படை மாணவர்கள் 5பேர் கலந்துகொண்டனர். அதில் 3பேர் இரண்டாம் நிலை தேர்வு முகாமில் கலந்துகொள்வதற்காக தேர்வு செய்யப்பட்டனர்.

11.08.2017 முதல் 20.08.2017 வரை பழனி, அருள்மிக பழனியாண்டவர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்திர பயிற்சி முகாமில் தேசிய மாணவர் படை மாணவர்கள் 45பேர் கலந்துகொண்டனர்.

18.08.2017 முதல் 28.08.2017 வரை காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புதுதில்லி குடியரசுதின அணிவகுப்பில் கலந்துகொள்வதற்கான இரண்டாம்நிலை தேர்வு முகாமில் S.நவநீதன் (II B.Com), A.பாலஅரவிந்த் (II B.Com), P.அழகர்ராஜா (II Phy) ஆகிய மூவர் கலந்துகொண்டனர்.

14.08.2017 முதல் 21.08.2017 வரை தேசிய மாணவர் படை மாணவர்கள் 80பேர் லெப்டின்ட் V.ராஜேந்திரன் தலைமையில் திருச்சி, திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில் முகாமிட்டு அங்கு நடைபெற்ற தபோவன 75ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கான முன்னேற்பாடுகள், கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பாதுகாப்பு ஆகிய பல்வேறு சேவைகள் புரிந்தனர். **Remove this**

19.08.2017 முதல் 05.09.2017 வரை புதுதில்லி, ஆக்ராவில் நடைபெறும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான தலைமைப்பண்பு முகாமில் (Advanced Leadership Camp) K.விஷ்ணு (III Che) கலந்துகொண்டார்.

**கலை இலக்கிய மன்றம்**

01.08.2017 அன்று கம்பம் பாரதி தமிழ் இலக்கியப் பேரவை நடத்திய மாணவர்களுக்கான இசைப்பாடல் மற்றும் கவிதைப் போட்டிகளில் M.அனீஸ், M.பவித்ரன் ஆகிய இரண்டு மாணவர்கள் கலந்துகொண்டு முறையே முதல் மற்றும் இரண்டாம் பரிசுகளைப் பெற்றனர்.

18.08.2017 மற்றும் 19.08.2017 ஆகிய இரண்டு நாட்கள் மேலமட்டையான், தானம் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற ‘பாரம்பரியம் 2017’ கலைப் போட்டிகளில் 8 மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் 11 போட்டிகள் நடத்தப்பட்டன. **Remove This**. இதில் ஒரு போட்டியில் முதல் பரிசும், 4 போட்டிகளில் இரண்டாம் பரிசும், ஒரு போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்றனர்.

24.08.2017 அன்று ஈஷா யோகா மையத்தின் சார்பாக மதுரையில் நடைபெற்ற கவிதை மற்றும் ஓவியப் போட்டிகளில் 3 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**குருதிக்கொடை**

07.08.2017 அன்று மதுரை, மீனாட்சி மிசன் மருத்துவமனையில் ‘$B^{+}$’ வகை இரத்தம் கொண்ட மூன்றாமாண்டு மாணவர்கள் K.V.அருண் (Mat), M.திவாகரன் (His), A.சண்முகராஜ் (Mat), S.ராஜேஷ் (Mat) M.அஜித் (Bot), M.சிவக்குமார் (Mat) ஆகியோர் இரத்தம் தானம் செய்தனர்.

05.08.2017 அன்று சோழவந்தான், விஜயலட்சுமி நர்சிங் ஹோம் மருத்துவமனையில் ‘A+’ வகை இரத்தம் கொண்ட மூன்றாமாண்டு கணினிஅறிவியல் மாணவர்கள் P.முருகன், G.மணிகண்டன், N.சுந்தரேசன் ஆகியோர் இரத்தம் தானம் செய்தனர்.

**2017 ஆகஸ்ட் மாதத்திற்கான கட்டண விவரம்**

உணவுக்கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ.90/-
முதலாமாண்டு மாணவர்களுக்கு (B.Com, B.COM (CA), CS தவிர) தமிழ்ப் புத்தகம் வழங்கியது - ரூ.483/-
முதலாமாண்டு கணினி அறிவியல் மாணவர்களுக்கு தமிழ்ப் புத்தகம் வழங்கியது - ரூ.244/-
இரண்டாமாண்டு மாணவர்களுக்கு (B.Com, B.COM (CA), CS தவிர) தமிழ்ப் புத்தகம் வழங்கியது - ரூ.38/-
இளங்கலை முதலாமாண்டு வேதியியல் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.3405/-
இளங்கலை மூன்றாமாண்டு வேதியியல் மாணவர்களுக்கு Industrial Visit கட்டணம் - ரூ.655/-
இளங்கலை முதலாமாண்டு வணிகவியல் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.3339/-
இளங்கலை முதலாமாண்டு வணிகவியல் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.2290/-
இளங்கலை மூன்றாமாண்டு வணிகவியல் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.1250/-
அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை வணிகவியல் மாணவர்களுக்கு கருத்தரங்கக் கட்டணம் - ரூ.300/-
அனைத்து இளங்கலை முதலாமாண்டு மாணவர்களுக்கு ஆங்கிலப் புத்தகம் வழங்கியது - ரூ.1145/-

இளங்கலை இரண்டாமாண்டு மாணவர்களுக்கு (B.Com, B.Com(CA), CS தவிர) புத்தகம் வழங்கியது - ரூ.300/-
மூன்றாமாண்டு B.Com, B.Com(CA), CS மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.702/-
முதலாமாண்டு கணினி அறிவியல் மாணவர்களுக்கு கணினி அறிவியல் புத்தகம் வழங்கியது - ரூ.998/-

அன்பும் நமஸ்காரமும்

இடம்: திருவேடகம் மேற்கு **முனைவர் சி.இராஜா**
நாள்: 01.08.2017 முதல்வர்